# மதவாச்சி பிரதேச சபை

# அநுராதபுர மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 10 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மதவாச்சி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) கிராமிய பாதைகள் அபிவிருத்திற்காக பெற்றிருந்த கடன் தொடர்பாக உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிழையான கணக்கீட்டு சீராக்கல்கள் காரணமாக நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் ரூபா 7,610,281 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மோட்டார் வாகனங்கள் மற்றம் வண்டிகளின் பெறுமதி ரூபா 2,584,263 இனால் அதிகரித்திருந்தது. ஆனால் அது பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து சபைக்கு வழங்கிய 160 கல்வணயிஸ் குழாய்களின் பெறுமதி ரூபா 177,143 தொகையினை நிதிக் கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் இருந்து முறையான அங்கீகாரம் ஒன்று இன்றி 4 விடயங்களின் ரூபா 10,841,953 பெறுமதி அகற்றப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக புத்தகங்களின் பதிவுகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 78,641,819 இற்கான 14 சொத்துக்கள் மற்றும் பொறுப்பு விடயங்கள் தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் / உளமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் / விரிவான பட்டோலை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 7,205,412 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 2,287,765 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 கடை வாடகை

---------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் 30 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 475,624 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1994 ஆகஸ்ட் 04 திகதிய NCP/LG/4/7/19 இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் தலைமை பெறுமதி மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் கடை வாடகை தீர்மானிக்கப்பட வேண்டும். எனினும் பொது சந்தையின் கடைகளின் வாடகை 21 வருடங்களுக்கு முன்னர் சபையினால் தீர்மானிக்கப்பட்ட தொகை மீதே அறவீடு நடைபெறுகின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------------

(அ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து மீளாய்வாண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த ரூபா 177,143 பெறுமதியான 160 கல்வணையிஸ் குழாய்கள் காணாமல் போயுள்ளன. அத்துடன் அது தொடர்பான முறையான விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் முன் கொண்டு வரப்படும் 05 கணக்கு விடயங்களின் ரூபா 3,097,564 இற்கான மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 16 ஊழியர்களிடம் நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டி காணப்படும் தகவல் பெற்றுக் கொள்ள முடியாது என குறிப்பிடப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 225,002 ஆக காணப்பட்டதுடன் அந்த கடன் மீதியை குறிப்பிட்ட பிணையாளரிடம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) கேள்வி பிணை வைப்பு பதிவேட்டின் பிரகாரம் 2001 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை திருப்பி செலுத்தப்படாத வைப்புக்களின் பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 224,418 ஆக காணப்பட்டதுடன் அவற்றை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்